நான் இதுகுறித்து, நம்முடைய மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் கலந்துகொண்டு, ஏனென்றால், கோயில்கள் அவர்களுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்றன. எனவே, அப்படிப்பட்ட கோயில்களிலே அதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றனவா என்பதை நான் அவரிடத்திலும் கலந்துகொண்டு, அப்படிப்பட்ட நிகழ்வு ஏதேனும் இருக்குமென்று சொன்னால் அதுகுறித்து அரசு முறையான நடவடிக்கையை நிச்சயமாக எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

155—

குடிநீர்த் தொட்டி

***29960—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் காட்டு விலங்குகளுக்கு வனப் பகுதியில் தரைமட்ட குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதியில் வன விலங்குகளுக்கு வனப் பகுதியில் தரைமட்ட குடிநீர்த் தொட்டி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியானது மேற்குத் தொடர்ச்சி

2010 மே 10]

மலைகளை ஒட்டிய வனப் பகுதியில் அமைந்திருப்பதால் வன விலங்குகள் கோடைக் காலங்களில் குடிநீருக்காகவும், உணவுக்காகவும் வனப் பகுதியை விட்டு குடியிருப்புப் பகுதிகளிலே புகுந்து, விவசாயிகளுடைய பயிர்களை அழித்துவிடுகிறது. அதேபோல, காட்டு யானைகள் மிதித்து விவசாயிகளும் உயிரிழக்கிறார்கள். ஆகவே, வனப் பகுதியிலே வன விலங்குகளுக்கு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளை அரசின் சார்பாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற 2006-2007-இலே, 6 நீர்த்தேக்கத் தொட்டிகளும், அதைப்போல, 2007-2008-இலே, 2 நீர்த்தேக்கத் தொட்டிகளும், 2008-2009-இலே, 2 நீர்த்தேக்கக் தொட்டிகளும், 2009-2010-இலே 2 குடிநீர்த்தேக்கத் தொட்டிகளும், ஆக, 12 நீர்த்தேக்கத் தொட்டிகள் 10 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவிலே அந்தப் பகுதியிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதைப்போல இன்னும் மற்ற திட்டங்களின் சார்பாகவும் அங்கே கசிவுநீர்க் குட்டைகளும், தடுப்பணைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இனி வருங்காலங்களிலும், தேவை ஏற்படுமேயானால், இன்னும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிகளிலிருந்து வன விலங்குகள் குடியிருப்புப் பகுதிகளுக்குப் புகாதவாறு அரசாங்கத்தால் சோலார் மின் வேலி போடப்படுகிறது. அந்த சோலார் மின் வேலி பேட்டரிகள் சரியாகப் பராமரிக்கப்படாததால் இப்போது செயலிழந்துவிடுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இந்த அவையிலே பல முறை சொல்லியிருக்கிறார். யானைகளுக்கு மனிதனைவிட கூர்மையான புத்தி இருப்பதால் காய்ந்த மரங்களைப் போட்டு, அந்த சோலார் மின் வேலியின்மீது ஏறி குடியிருப்புப் பகுதிகளில் புகுந்துவிடுகின்றன. அண்டை*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2010 மே 10

மாநிலமான கர்நாடகாவிலே கருங்கல் சுவர்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவ்வாறு நம்முடைய வனப் பகுதிகளிலும் கருங்கல் சுவர் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் குறிப்பாக, இப்போது காட்டுப் பன்றிகளால் விவசாயிகளுக்கு பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. அந்தக் காட்டுப் பன்றிகளைச் சுட்டால், வனத் துறையினரால் 30,000/- ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது. அந்தக் காட்டுப் பன்றிகள் வன விலங்குகள் பட்டியலிலிருந்து நீக்கப்படுமா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் காட்டுப் பன்றிகளைப் பொறுத்த அளவில், அதிக தொல்லை தருவதாக எல்லா இடங்களில் இருந்தும் புகார்கள் வந்ததன் அடிப்படையில், மத்திய வன உயிரின ஆணையத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பட்டியலிலிருந்து அகற்றினால், அதை அழிக்கின்ற உரிமையைப் பெறலாம் என்கின்ற காரணத்தினாலே பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. சூரிய ஒளியில் இயங்குகின்ற மின்வேலி செயல்படவில்லை என்று சொல்லியிருக்கிறார். சில இடங்களிலே அந்த battery charge இல்லாமல் செயல்படவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. அதையெல்லாம் சரிசெய்வதற்கு அரசு அலுவலர்களுக்கு, துறையின் அலுவலர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக காட்டுப் பகுதியில் இருக்கின்ற வன விலங்குகள் எல்லாம் குடிநீருக்காகத்தான் கிராமங்களிலும், வயல்காடுகளிலும் புகுந்து அட்டகாசம் செய்வதும், டூரிஸ்ட்டுகள் வருகின்றபோது அவர்களுடைய வண்டி, வாகனங்களை

2010 மே 10]

துரத்துவதாகவும் இருக்கின்றன. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வனப் பகுதியில் இராட்சத ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து, அங்கு கசிவுநீர்க் குட்டைகளை அமைத்து, வெயில் நாளாக இருந்தாலும், கோடைக் காலமாக இருந்தாலும், எந்த நாட்களாக இருந்தாலும், காட்டில் வாழ்கின்ற வன விலங்குகளுக்கு அங்கேயே குடிநீர் கிடைப்பதற்கான ஏற்பாட்டை நம்முடைய அரசு செய்வதற்கு முன்வருமா என்பதையும், அதைப்போன்று செய்து கொடுக்கும்பட்சத்தில், பொதுமக்களுக்கோ, விவசாய நிலங்களுக்கோ இதுபோன்று தொந்தரவு இல்லாமல் இருக்கும் என்பதையும் அரசு கவனத்தில்கொண்டு, அதற்காகத் தனிக் கவனம் செலுத்துமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தரைமட்ட நீர்த் தொட்டி, தமிழகம் முழுவதும் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசிலே 126 இடங்களிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. இதுதவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதைப்போல, தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்திலே தொடங்கப்பட்ட—நான்காவது முறையாக ஆட்சியில் இருந்த நேரத்தில் தொடங்கப்பட்ட—தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், 27,606 தடுப்பணைகளும், 3,378 கசிவுநீர்க் குட்டைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதுதவிர, இடைநிலையாக, இப்போது தலைவர் கலைஞர் அவர்கள், இன்னொரு திட்டத்தையும் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். அதன்மூலம், 514 தடுப்பணைகளும், 251 கசிவுநீர்க் குட்டைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆழ்துளைக் கிணறு அமைத்தால் இன்னும் சரியாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*